முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பிருகுமகரிஷி அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

07.10.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **கருணைக் கடலே அரங்கா**
   **கலியிடர் வெல்லும் தேசிகா**
   **வறுமை போக்கி மக்களின்**
   **வாழ்வாதாரம் காக்க வந்த குருராசா**
2. அரசனே உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
   தரணியிலே **விளம்பி தரிவை திங்கள்**
   **தாமுரைக்க மூவேழு திகதி கதிர்வாரம்**
   **(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 21ம் நாள் 07.10.2018, ஞாயிற்றுக்கிழமை)**
3. **வாரமதில் பிருகுமகரிஷி யானும்**
   **வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற**
   **சோரமில்லா வாழ்க்கை நலமும்**
   **சுபிட்சமான வாழ்வும் வளமும் பெற**
4. வளம் பெற வழிபாட்டை ஞானவழி
   வடிவேலனாரின் பூசையாக செய்து
   பலம் பெற அரங்கன் நடத்துகின்ற
   பவுர்ணமி பூசைதோறும் கலந்து
5. கலந்து உலகோர் வருக
   கண்ணியமாக தான தருமத்தில்
   கலந்து பொருளுதவி செய்து
   கடைத்தேற்றம் காணும் உயர் வழியை
6. உயர் வழியை உலகோர் பின்பற்ற
   உலகத்தில் ஆறுமுகன் அருள் பெற்று
   தயவுமிக்க ஞானவான்களாக
   தரணியோர் சிறந்து நிற்பர்
7. நிற்கவே அரங்கன் தலைமையில்
   நிலவுலகே ஞான உலகமாகி
   அற்புதங்கள் காணக் கூடும்
   அகிலமெங்கும் அரங்கனை ஏற்கும்
8. ஏற்கும் சீடர்கள் கூட்டம் பெருகி
   எல்லா திக்கிலும் முருகன் வழிபாடு
   ஏற்புடையதாகி தருமம் வளர்ந்து
   எல்லா மக்களும் அருளாசி பெற்று

9. பெற்றுமே கலியுகம் தானும்
பிசகில்லா ஞானயுகம் ஆகும்
ஆற்றல்பட அரங்கன் அருள்
ஆசியுரை உபதேசம் கேட்க

10. கேட்கவே ஏற்று நடந்திட
குறையிலா மாற்றம் கண்டு
மாட்சிமைபட ஆளுமை மாறும்
மரணம் வெல்லும் சக்தி கண்டு

11. கண்டுமே மக்களெல்லாம் ஞானியாவர்
கலி மாயை வென்று உலகை
தொண்டு வழியே மீட்டு சிறப்பர்
தெரிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் பிருகுமகரிஷி அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லாது கருணை கொண்டு கலியுக மக்களை தர்மசக்தி கொண்டு காத்து ரட்சிக்கின்ற கருணைக் கடலே ஆறுமுக அரங்கமகா தேசிகனே, கலியுகத்தின் துன்பங்களை வென்று மக்களை காக்கின்ற ஞானதேசிகனே மக்களின் இல்லாமை எனும் வறுமையைப் போக்கி மக்களின் வாழ்வாதாரத்தினை காக்க வந்திட்ட ஞானகுருவே குருராசனே அரங்கமகா தேசிகனே உலகமெலாம் உமது பெருமையை கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 21ம் நாள் 07.10.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பிருகுமகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பிருகுமகரிஷி.

உலகினில் உள்ள மக்களெல்லாம் வீண் போகாத நல்வாழ்வினை வாழ வேண்டியும் வாழ்க்கை நலம் பெருகி சுபிட்சமான வாழ்வையும் வளமான வாழ்வையும் பெற்று அமைதியான வாழ்வினை வாழ்ந்து சிறப்படையவே எல்லாம்வல்ல முழுமுதற் ஞான தெய்வமான முருகப்பெருமானின் ஞானவழிபாட்டினை சிறப்பு வழிபாடுகளாகச் செய்து வருகின்றார் ஆறுமுக அரங்கமகா தேசிகனார்.

ஆறுமுக அரங்கன் உலக நலம் கருதி செய்கின்ற ஞானபூசைகளிலே பௌர்ணமி தோறும் நடத்துகின்ற ஞானியர் சிறப்பு வழிபாடுகளிலே மக்கள் கலந்து வருவதுடன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் நடத்துகின்ற கண்ணியம் மிக்கதும் ஜென்மத்தைக் கடைத்தேற்றும் வல்லமைகளை தரவல்லதுமான தானதருமங்களில் அன்னதான அறப்பணிகளில் தாராளமாய் பொருளுதவிகளைச் செய்து அவரவரும் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளுமாறு புண்ணிய பலத்தினை பெருக்கி வருவதுடன் மனம் உருகி முருகப்பெருமான் திருவடி பற்றி தவறாது பூஜைகளைச் செய்தும் முருகப்பெருமானின் திருவருளைப் பெறுவோரெல்லாம் உலகினில் தயவுமிக்க ஞானவான்களாக ஆகி சிறப்படைவார்கள்.

தானதருமமும், ஞானவழிபாடும், உலகினில் பெருகிட பெருகிட ஆறுமுக அரங்கன் தலைமையில் இந்த உலகமே கலியுகத்தின் இடர்களில் இருந்து மீட்சியடைந்து ஞான உலகமாக ஆகி பலவிதமான அற்புதங்களை அடைந்திடும். உலகமெலாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையை ஏற்கும். உலகமெங்கும் அரங்கன் தலைமையை ஏற்கும் சீடர்கள் கூட்டம் பெருகி எல்லா திசைகளிலும் முழுமுதற் கடவுள் முருகப்பெருமானின் வழிபாடுகள்

மக்களுக்கு ஏற்புடையதாகி மக்களெல்லாம் முருகப்பெருமானை வழிபடுவதோடு உலகமெங்கும் தர்மம் வளர்ந்து எல்லா மக்களும் ஞானிகளின் அருளாசிகளைப் பெற்று கலியுகமே தவறாமல் ஞானயுகமாக மாறிடும்.

ஆற்றல்மிக்க அரங்கனின் ஜென்மத்தைக் கடைத்தேற்றவல்ல அருளுரைகளை, உபதேசங்களை கேட்டும், கேட்டு உபதேசங்களை ஏற்றுக் கொண்டு அதன் வழி தர்மங்கள் செய்து உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு நடந்து வரவர, உலகின் அருள்பலமும், ஞானபலமும், புண்ணியபலமும் பெருகி உலகினை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் மாறி மனிதர்கள் ஆட்சி மாறி ஞானிகள் ஆளும் ஞானஆட்சியாக மாறிடும்.

உலக மக்களெல்லாம் மரணத்தை வெல்லும் மரணமிலாப் பெருவாழ்வு மார்க்கமதை அறிந்து கடைப்பிடித்து மரணத்தை வெல்லும் சக்தியைப் பெற்று ஞானிகளாகவும் ஆகிடுவர். அவ்விதமே ஞானநிலை பெற்ற அவரெல்லாம் கலியுக மாயையை வென்று உலகினில் தொண்டுகளை தன்னலம் இன்றி நீதிநெறியுடன் செய்து இவ்வுலகை மீட்டு சிறப்புமிக்க ஞானஉலகமாக ஆக்கி முருகப்பெருமான் தலைமையில் அரங்கன் முன்னிலையில் வழிநடத்தி சென்று சிறப்புமிக்க உலகமாக ஆக்கிடுவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பிருகுமகரிஷி.

–சுபம்–